**வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் - மாகாணக் கூறு - 2015**

---

வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் - மாகாணக் கூறின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய 2640-எஸ்ஆர்ஐ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் (iv) ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாகாண சபைகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வடக்கு மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கையில் வட மாகாணத்திற்குள்ளும் வட மாகாணத்திற்கும் தென் பிராந்தியத்திற்கும் இடையில் வீதி இணைப்பை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 3,530.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 27.16 மில்லினானதுடன் அதில் ரூபா 3,172 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 24.40 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 ஒக்தோபர் 22 இல் தொடங்கியிருந்ததுடன் 2015 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. தொடர்ந்து செயற்திட்டக் காலமானது 2016 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான

தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கட்டுநிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியானது அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) கடனின் கீழான பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்றும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதுமாகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையிலான எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனது சிறந்த தகவல்கள் மற்றும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கட்டுநிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதுடன், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியானது அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டுள்ளன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

அரசாங்க கொள்வனவு வழிகாட்டியின் 2.14.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகார எல்லையை மிகைத்தும் திறந்த போட்டி அடிப்படையிலான கேள்வி நடைமுறையினைப் பின்பற்றாமலும் ரூபா 499.04 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமுடைய வேப்பங்குளம் - பெரியமுறிப்பு வீதியின் புனரமைப்பு பணிகளுக்கான ஒப்பந்தங்கள் 03 பொதிகளின் கீழ் 02 ஒப்பந்ததாரர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

**3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 24.40 | 3,172.00 | 397.00 | 2.31 | 300.36 | 18.33 | 2,383.33 |
| இலங்கை அரசாங்கம் | 2.76 | 358.80 | 49.61 | 0.28 | 36.89 | 2.15 | 279.36 |
| **மொத்தம்** | **27.16** | **3,530.80** | **446.61** | **2.59** | **337.25** | **20.48** | **2,662.69** |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், கடன் உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 24.40 மில்லியன் ஒதுக்கீட்டில், செயற்திட்ட நடவடிக்கைகளின் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு 05 வருடங்கள் கடந்த பின்னரும் ஐ.அ.டொலர் 18.33 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதனால், 2016 யூன் 30 இல் உள்ளவாறு செயற்திட்டப்பணிகளின் முடிவுறுத்தல் வரையான காலப்பகுதியினுள் ஒதுக்கப்பட்ட தொகையில் எஞ்சிய தொகையான ஐ.அ.டொலர் 6.07 மில்லியன் தொகையின் பயன்பாட்டின் சாத்தியத்தன்மை சந்தேகத்திற்கிடமாகவுள்ளது.

**3.2 பௌதீக முன்னேற்றம்**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 147.65 கிலோமீற்றர்கள் நீளமான 23 மாகாண வீதிகளின் புனரமைப்புப் பணிகளுக்கான ஒப்பந்தங்கள் செயற்திட்டத்தால் 06 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் கையளிக்கப்பட்டிருந்தது. இவற்றுள் 109.29 கிலோமீற்றர்கள் நீளமான 21 மாகாண வீதிகளின் புனரமைப்புப் பணிகள் 2014 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. செயற்திட்ட காலத்தின் இறுதியின் பின்னரும் 26.96 கிலோமீற்றர்கள் நீளமான வேப்பங்குளம் - பெரியமுறிப்பு விதியின் புனரமைப்பிற்காக வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் மீள கையளிக்கப்பட்டு 2016 யூலை 31 ஆந் திகதி முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

---------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிடப்பட்டதன் பிரகாரம், ரூபா 368.95 மில்லியன் கிரயத்தில் வவுனியா மாவட்டத்தின் வேப்பங்குளம் - பெரியமுறிப்பு வீதியினை புனரமைப்பதற்கான ஒப்பந்தமானது ஒப்பந்தத்தின் நோக்கெல்லையிலிருந்தான விலகல்கள் மீதான சர்ச்சைகள் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், எஞ்சிய பணிகளை முடிவுறுத்துவதற்காக ஒப்பந்தமானது ரூபா 499.04 மில்லியன் கிரயத்தில் ஏனைய 02 ஒப்பந்ததாரர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) புதூர் - பலமோட்டை மற்றும் மாங்குளம் - மருதமடு வீதிகளின் புனரமைப்புப் பணிகளுக்கான ரூபா 317.33 மில்லியன் ஆரம்ப பாதீடானது குறித்த வீதிகளின் புனரமைப்புப் பணிகளின் நோக்கெல்லைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக ரூபா 249.20 மில்லியன் வரை தொடர்ந்து குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக புனரமைப்புப் பணிகளின் மிகை மதிப்பீட்டு கிரயத்தில் வேலை ஆரம்பிப்பு முற்பணங்களை வழங்குவதில் ஒப்பந்ததாரர்களுக்கு மேலதிக நிதி நலன்களுக்கான சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டிருந்தன.